[11th November 1961

SRI S. M. ANNAMALAI : ஸார், இது ஜமீந்தாரி ஏரியா, ஜமீந்தார் ஏரியாக்களில் தண்ணீர் பிடிப்புள்ள இடங்கள் இருந்தால் அதை விட்டுவிட வேண்டும் என்று சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். இந்த இடத்தில் ஏறக்குறைய இரண்டு அடி தண்ணீர் பிடிக்கும். ஆனால் இந்த இடத்தை சர்வே செய்த சர்வேயர் அவர்கள் அவராகவே ஒருவருக்கு பட்டா கொடுத்து விட்டார்கள். ஆகவே சர்க்கார் உடனடியாக இதைப்பற்றி விசாரித்து அந்த சர்வேயர் யார் என்று கண்டுபிடித்து அவர் பேரில் நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : There seems to be a discrepancy of about 50 cents, which is alleged to be under water. So there is confusion in survey number and patta number. That is being looked into.

SRI S. M. ANNAMALAI : ஸார், அமைச்சர் அவர்கள் 50 சென்ட் என்று பதிலில் சொல்லியிருக்கிறார்கள். உண்மையில் இதில் இரண்டு ஏக்கருக்கு மேல் ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள். இதற்கு முக்கியமான காரணம் அவர் சில அதிகாரிகளை மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் கனம் அமைச்சர் அவர்களுடைய ....

DEPUTY SPEAKER : I am not allowing this question.

The Cauvery waters for Madras City

* 2002 *Q.*—SRI N. MARUDACHALAM (on behalf of Sri M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have taken a final decision on the scheme for conveying the Cauvery water to Madras City; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Government Hospital, Vellore

* 2003 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வேலூர் சர்க்கார் ஆஸ்பத்திரியில் கண் சிகிச்சைக்காக தனியாக கண் டாக்டர், அதற்கான சிப்பந்திகள், கட்டிடம் முதலியவைகளை ஏற்படுத்தக் கோரி வி. கே. கோதண்டராமன், எம்.எல்.ஏ., அவர்கள் மூலம் 1--12--1960 தேதி அமைச்சரிடம் கொடுத்த லெட்டர் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU : Proposals for the employment of additional staff, purchase of equipment and construction of a separate building for the Eye Clinic in the Government Headquarters Hospital, Vellore, are now under the consideration of the Director of Medical Services.